# பெரியபுராணத்தில் சரியை

**இலங்கேஸ்வரி [1]**
Elangeswary[1]

**Abstract**

The human Soul attains salvation through the four ways namely, Sariyai, Kiriyai, Yogam and Gnanam. Periyapuranam describes the life sketch of 63 Nayanmars, who reach the feet of God through these four ways. A majority of these Nayanmars indulged in Sariyai and reached God facing the hurdles given by God as a measure of examining them. The services undertaken by these Nayanmars seem to be full of Godliness, welfare of others, welfare of the world and creating devotion among people. This paper deals with how the Nayanmars through Sariyai attain salvation, i.e., through their way of life which is viewed to be simple but lofty.

*Key Words : Periyapuranam, Four Ways, Sariyai, Salvation, Simple but Lofty.*

## முன்னுரை

சைவ சமயம் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு வழிகளில் ஆன்மா முக்தியடைய வழிகாட்டுகின்றது. இந்த நான்கு நெறிகளையும் பின்பற்றி முக்தி பெற்ற அடியவர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்குவது பெரியபுராணம். மொத்தம் அறுபத்து மூன்று நாயன்மார்களின் வாழ்க்கைச் சரிதத்தைக் கூறும் பெரியபுராணத்தில், சரியையின் வழியில் நின்று முக்தி பெற்ற அடியார்களே மிக அதிகமாகக் காணப்படுகின்றனர். இவர்கள் சரியையில் நின்று முக்தியை அடைந்த போதிலும் இவர்கள் கடைபிடித்த சரியைத் தொண்டுகளும் இவர்களுக்காக இறைவன் கொடுத்த சோதனைகளும் மாறுபட்டவையாகவே இருந்துள்ளன. இவ்வடியவர்கள் ஒவ்வொருவரும் மேற்கொண்ட சிவத்திருப்பணிகள் ஒவ் வொன்றும் தெய்வீகம் நிறைந்தவைகளாகவும், சிவப்பணியோடு மக்களின் நலம் காக்கும் பணியாகவும், உலக நன்மை கருதிச் செய்த பணியாகவும், மக்களிடையே பக்தியை வளர்க்கும் சேவையாகவும் விளங்கியுள்ளன. ஆகவேதான் சரியையின் வழியில் அடியார்கள் மேற்கொண்ட பணிகளுள் சில மிக எளிய தொண்டாகப் பார்க்கப்பட்ட போதிலும் அவற்றால் விளைந்த பயனானது அவர்களை முக்திக்கு இட்டுச் சென்றுள்ளது.

## பெரிய புராணம்

பன்னிரு திருமுறைகளுள் பன்னிரண்டாம் திருமுறையாக விளங்கும் பெரியபுராணம் சேக்கிழார் பெருமானால் அருளப்பெற்றதாகும் (கலியாணசுந்தரனார், 2000, 18). திருத்தொண்டர் புராணமென்றும் வழங்கப்பட்டும் பெரியபுராணத்தின் வழி 63 நாயன்மார்கள் பற்றிய வாழ்க்கை வரலாறும் அவ்வடியவர்கள் நிகழ்த்திய அற்புதங்களும் செறிவாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவ்வடியவர்கள் யாவரும் பெறுதற்கரிய பேராகிய முக்திப் பேற்றை அடைந்தவர்களாவர் (கிருபானந்த வாரியார், 2003, 12).

பொதுவில் பதி, பசு, பாசம் ஆகிய மூன்று கூறுகளே சைவ சித்தாந்தம் கூறும் அடிப்படை மெய்ஞ்ஞானமாகும் (Nagappan Arumugam, 2011, 122, 175 & 209). இவை ஆன்மா முக்தி அடைவதற்கான வழியைச் சாற்றுகின்றன. அதன் அடிப்படையில், பசுவாகிய உயிர்

---

[1]The author is a postgraduate candidate at The Department of Indian Studies, University of Malaya. Elanges87@gmail.com

பதியான இறைவனை அடைவதற்குத் தம்மைப் பற்றியுள்ள பாசத்திலிருந்து (ஆணவம், கன்மம், மாயை) விடுபட வேண்டும் என்பதே சைவ சித்தாந்தம் கூறும் முக்திக்கான வழியாகக் கூறப்படுகின்றது (சண்முகதேசி ஞானசம்பந்த சுவாமிகள், 2005, 10).

மனிதன் தம்மைப் பற்றியுள்ள பாசத்திலிருந்து விடுபட சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு வழிகளில் இறைவனை அடைய முயற்சி செய்ய வேண்டும் என்பதுதான் சைவ சித்தாந்தம் காட்டும் வழியாகிறது (நாராயணவேலுபிள்ளை, 1995, 216). உண்மை நிலையில் நாயன்மார்கள் யாவரும் இந்த நான்கு படிநிலைகளில் ஏதேனும் ஒரு வழியைப் பின்பற்றியே முக்தி அடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றை ஆய்வின் அடிப்படையில் காணும் போது, இவர்களுள் 68% நாயன்மார்கள் அதாவது 43 நாயன்மார்கள் சரியை வழியில் நின்றே முக்தி அடைந்துள்ளனர் என்பது தெரியவருகிறது (கலியாணசுந்தரனார், 2000, 20-22). எனவே இந்தக் கட்டுரையானது சரியை வழி அவ்வடியவர்கள் எவ்வாறு முக்திப் பேற்றை அடைந்தனர் என்பதை விளக்கப்படுத்துவதாகவே அமையப் பெற்றுள்ளது.

**சரியை**

சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு வழிகளுள், சரியை என்று குறிப்பிட்டவுடன் முதற்கண் சிந்தையில் நிற்பவர் அப்பர் பெருமான் ஆவார். அப்பர், ‘தன்கடன் அடியேனையுந் தாங்குதல், என்கடன் பணி செய்து கிடப்பதே’ என்று கூறுகின்றார் (சோமசுந்தரம், 2001, 130). சரியையில் தொண்டுநெறி அல்லது தாச நெறி சிறப்பிடம் பெறுகிறது. அதனாலேயே திருநாவுக்கரசர் மார்க்கம், தாச மார்க்கம் எனப்பட்டது. இறைவனைத் தலைவனாகவும், தன்னைப் பணியாளராகவும் எண்ணி, இறைவனின் உருவத் திருமேனியை வழிபடுதல் இதன் முக்கியப் படிநிலையாகும். சரியையில் தொண்டுக்கே முதலிடம் (கண்ணாத்தாள், 2011, 281). திருவிளக்கிடுதல், திருமெழுகிடுதல், திருவலகிடுதல், பூமாலைச் சூட்டி பாமாலைத் தொடுத்தல், அடியார்களுக்குப் பணிபுரிதல் போன்றவை இச்சரியைக்குரிய நெறிகளாகக் கூறப்படுகின்றன (நாகப்பன் ஆறுமுகம், 2008, 287). பெரியபுராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சரியையில் நின்று முக்தியடைந்த 43 நாயன்மார்களும் இப்பணிகளுள் ஏதாவது ஒன்றை முதன்மையாகக் கொண்டே இறைவனடி சேர்ந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு சரியையின் வழியில் இவர்கள் ஆற்றிய தொண்டுகளை நான்கு வகைகளாகப் பகுத்துக் கூறலாம்.

அவையாவன:

1. சிவனடியார்களுக்கு அமுது படைத்தல்.
2. சிவனடியார்களுக்குப் பொருளுதவி செய்தல்.
3. சிவனடியார்களுக்கு உடல் உழைப்புத் தொண்டுகள் செய்தல்.
4. ஆலயத் தொண்டுகள் செய்தல்.

இந்த ஆய்வுக் கட்டுரையில் சுருக்கம் கருதி, சிவனடியார்களுக்குச் சரியையின் வழியில் தொண்டு செய்ததன் மூலம் நாயன்மார்கள் அடையப்பெற்ற முக்தி குறித்து மட்டும் விளக்கப்படுத்தப்பட்டுள்ளது.

**சிவனடியார்களுக்கு உணவளித்தல்**

| எண். | பெயர் | செய்த தொண்டுகள் |
|---|---|---|
| 1. | இளையான்குடிமாற நாயனார் | சிவனடியார்களுக்கு அமுது படைக்காமல் உண்பதில்லை. |
| 2. | குலச்சிறை நாயனார் | சிவனடியார்களுக்கு அமுது படைத்தல் இவர் வாழ்க்கையின் முக்கியக் கொள்கையாக இருந்தது. |
| 3. | அப்பூதியடிகள் | பெற்ற குழந்தையின் மரணத்தை மறைத்து சிவனடியாருக்கு உணவளிக்க முற்படுதல். |
| 4. | மூர்க்க நாயனார் | வறுமை வந்த காலத்தில் சூதாட்டத்தில் ஈடுபட்டு அதில் வரும் வருமானத்தில் சிவனடியார்களுக்கு உணவளித்தல். |
| 5. | சிறப்புலி நாயனார் | மிக நீண்ட காலம் சிவனடியார்களுக்கு உணவளித்தவர். |
| 6. | சிறுத்தொண்டர் | சிவனடியார் வேண்டுதலுக்கு இணங்கி தனது ஒரே மகனைக் கறி சமைத்து, சிவனடியார்க்கு உணவளித்தவர். |
| 7. | புகழ்ச்சோழ நாயனார் | சிவனடியார்களுக்குத் தவறாமல் உணவளித்த ஒரு மன்னர். |
| 8. | கலிகம்ப நாயனார் | சிவனடியார்களின் பாதங்களைக் கழுவி, அவர்களை வணங்கிப் பின் உணவளிக்கும் வழக்கம் கொண்டவர். |
| 9. | முனையடுவார் நாயனார் | சிவனடியார்களுக்கு மிக நீண்ட காலமாக உணவளித்த ஒருவர். |
| 10. | விறமிண்டர் | சிவனடியார்களுக்கு மிக நீண்ட காலமாக உணவளித்தவர். |

*மேற்கண்ட அட்டவணையானது சரியையின் வழியில் அடியவர்க்கு அமுது படைத்தலையே தலையாயப் பணியாகக் கொண்டு உய்தி பெற்ற அடியார்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது.*

*உணவு என்பது மனிதர்களின் அடிப்படைத் தேவைகளில் மிக முக்கியமானது. சமுதாயத்தில் மிகக் கொடிய நோயாகக் கருதப்படும் பசி, ஒரு மனிதனை அறிவிழக்கச் செய்து, அவனை எத்தகைய இழிந்த நிலைக்கும் கொண்டு செல்லும் என்பது நம் முன்னோர்களின் வாக்கு (அருள்பிரகாச வள்ளலார். 2013. 2-3). ஒருவன் எத்தகைய உயர்வுடையவனாக இருந்தபோதிலும் அவனைப் பசித்தீயானது மிகத் தாழ்ந்த நிலைக்குக் கொண்டு சென்றுவிடும். இதுபற்றிக் குறிப்பிடும் போது ஔவைப் பிராட்டியார், பசியானது ஒருவரது கல்வி, மானம், தவம், ஆற்றல், காதல், குலம், அறிவு, உயர்வு, தாளாண்மை, புண்ணியம் எனும் பத்து வகையான உயர்வுகளையும் வீழ்த்திவிடும் என்பதாகக் கூறுகின்றார் என்றால் இதன் கொடுமை குறித்து மேலும் விளக்கப்படுத்த வேண்டியதில்லை (நல்வழி, 26). அதனால்தான் பசிப்பிணி போக்குதல் மிக உயர்ந்த பண்பாகப் பழந்தமிழர் நாகரீகத்தில் போற்றப்பட்டுள்ளது.*

*சைவ சமயத்தைப் பொருத்தமட்டில், சிவபெருமானின் 64 சிவமூர்த்தங்களுள் மகேசுவர*

மூர்த்தமானது உயிர்களுக்குப் பசிப்பிணி போக்குதல் பொருட்டு அருளும் மூர்த்தமாகவே போற்றப்படுகின்றது. அதனால்தான் இன்றும் கோவில்களில் நடத்தப்படும் அன்னதானம் மகேசுவர பூஜை என அழைக்கப்படுகின்றது (இராமதாஸ், 37). இறைவனே உயிர்களுக்குப் படியளக்கத் தனித்த ஒரு திருக்கோலத்தைக் கொண்டு அருள்கிறார் என்று காணும்போது, அன்னதானத்தின் மேன்மைக்கு வேறு சான்றுகள் ஏதும் தேவையில்லை என்றே கூறவேண்டும். ஆகவே அடியார்களுக்கு அன்னதானம் அளிப்பதையே தங்கள் வாழ்வில் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்த அடியவர்கள், அந்த மகேசுவர மூர்த்தியின் தொழிலையே தம் பணியாகக் கொண்டு வாழ்ந்தனர் என்பதாகவே இதனைக் காணுதல் வேண்டும். இதுவே அவர்கள் முக்திக்குத் தகுதியுடையவர்கள் என்பதற்கான சான்றாக அமைகின்றது.

இதுவல்லாது அடியவர்களுக்கு உணவளித்தல் பொருட்டு எதனையும் எதிர்கொள்ளத் தயங்காத பக்தி வைராக்கியமும், தியாக உள்ளமும் இவர்களுக்கு மேலும் பெருமை சேர்த்தது எனலாம். இதில் முக்கியமாகக் காணப்பட வேண்டிய செய்தியானது, அடியவர்க்கு உணவளித்தல் ஆகும். பொதுவில் பசித்தோர்க்கு உணவிடுதல் மிகப்பெரிய புண்ணிய பலத்தைச் சேர்க்கும். அதிலும் அடியவர்க்கு உணவளித்தல் எல்லையில்லாத புண்ணியத்தைச் சேர்க்கும் என்பது திண்ணம் (ஜனசக்தி, 2011, 361). இதற்கு முக்கியக் காரணமும் உள்ளது.

அடியவர் என்பவர் முப்போதும் சிவன்பால் சிந்தை கொண்டவர். உலக நன்மைக்காகத் தவம் இயற்றும் நல்லோர். ஓடும், செம்பொன்னும் ஒன்றெனக் கருத்தில் கொண்டு (இருநிலையொப்பு) பரமனை அல்லாது வேறொன்றின் மீதும் பற்றில்லாத நிலைப்பாட்டினர். இத்தகையோரின் அரிய தவத்தினாலும், அருளினாலும் உலகம் செழித்து விளங்குகிறது என்பது மறுக்க முடியாத உண்மை. இதனையே ‘தொல்லுலகில் நல்லா ரொருவர் உளரேல் அவர்பொருட் டெல்லார்க்கும் பெய்யும் மழை’ என ஔவையார் கூறுகின்றார் (மூதுரை, 10).

இத்தகைய நல்லோர் தவத்தில் ஆழ்ந்து உலகுக்கு நன்மை புரிய வேண்டும் என்றால், அவர்கள் பசிப்பிணியில்லாது இருத்தல் வேண்டும். ஏனெனில் பசிப்பிணியானது தவத்தையே அழித்துவிடும் எனக் கூறப்படுகின்றது (நல்வழி, 26). தவத்தில் இருப்போர்க்கு உடலும் உள்ளமும் பேணிக்காக்கப்பட வேண்டியவைகளாகும். இதனையே திருமூலர்,

**“உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்**
**உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்று**
**உடம்பினை யானிருந் தோம்புகின்றேனே” (திருமந்திரம், 705)**

என்கிறார். அதோடு மட்டுமல்லாமல், ‘உடம்பார் அழியின் உயிரார் அழிவர்’ (திருமந்திரம், 704) என்றும், தவத்தோர்க்கு எச்சரிக்கின்றார் திருமூலபிரான். இதனை மிக எளிய மொழியில் ‘சுவரை வைத்துத்தான் சித்திரம் வரைய முடியும்’ என்று கூறுவர் நம் முன்னோர். ஆகவே தவத்தோர்க்கு உடலைப் பாதுகாத்தல் எத்துணை முக்கியத்துவம் உடையது என்பது இதன் வழி தெரிய வருகின்றது. மேலும், அதற்கு ஆதாரமாக விளங்கும் உணவினை அளிக்கும் தொண்டானது எத்துணை மகத்துவம் வாய்ந்தது என்பதுவும் இதன்வழி பெறப்படுகின்றது.

ஆகவே, உலகில் தவம் நிலைபெறவும், நல்லோர் வாழவும் வகைசெய்யும் மேன்மையுடைய தொண்டாக அடியவர்க்கு அமுதுபடைத்தல் போற்றப்படுகின்றது. ஆகையால்தான் இத்தகைய உயரிய தொண்டினை மேற்கொண்ட அடியார்களை நாடி வந்து, அடியவர்களின் உறுதியைச் சோதித்து இறைவன் அருள் புரிந்திருக்கின்றார் என்பது பெரியபுராணம் உணர்த்தும் மெய்ஞ் ஞானமாகும். இதுவல்லாது, சிவனடியார்களுக்கு உணவளித்தல் என்பது இறைவனுக்கே

உணவளித்ததற்குச் சமமானதெனப் போற்றப்படுகின்றது. ஔவையார் 'இறைவனோ தொண்டருள்ளத் தொடுக்கம்' என்கிறார் (சோமசுந்தரம், *1996, 120*). இதனையே திருமூலர்,

**"படமாடக் கோயில் பகவற்கு ஒன்றீயில்**
**நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்காகா;**
**நடமாடும் கோயில் நம்பர்க் கொன்றீயின்**
**படமாடும் கோயில் பகவற்கது ஆமே" (திருமந்திரம், 1857)**

எனும் பாடலின் வழி மெய்ப்பிக்கின்றார். இதன்வழி ஒவ்வொரு மனிதருள்ளும் இறைவன் வீற்றிருக்கின்றார் என்றும், அதனால் ஒவ்வொருவரும் நடமாடும் கோயில்கள் என்று திருமூலர் உறுதிசெய்வதோடு, இத்தகைய நடமாடும் கோயில்களாகிய அடியவர்களுக்குக் கொடுப்பது நேரடியாக இறைவனைச் சென்று சேர்கிறது எனும் கருத்தையும் முன்வைக்கின்றார் (மணிவாசகன், *2010, 675*). மனிதனுக்குச் செய்யும் உதவியானதே இறைவனுக்குச் செய்யும் உதவியாகும் என்பதே இவரின் கருத்தாக அமைகின்றது (சாமி தியாகராசன், *1994, 28*). இதன் அடிப்படையில் நாயன்மார்களும் சிவனடியார்கள் யாவரையும் சிவவடிவமாகவே எண்ணி, அவர்களுக்கு உணவிட்டுத் தொண்டாற்றியுள்ளனர் என அறியப்படுகின்றது. ஆகவேதான் எத்தகைய சூழலிலும் இவர்கள் தாங்கள் கொண்ட கொள்கையில் இருந்து பின்வாங்காமல் தங்கள் தொண்டினைச் செய்துள்ளனர்.

இதன்வழி, சிவனடியார்களுக்கு உணவளித்தலின் மேன்மையும், அதன்பொருட்டு அடியவர்கள் அடையப்பெற்ற முக்தி நிலையும் எத்தகைய உயர்வினை உடையது என்பது பெறப்படுகின்றது. இதுபோலவே, அடியவர்களுக்குப் பொருளளித்தலின் மூலமும் நாயன்மார்கள் முக்தி நிலையை அடைந்துள்ளனர்.

**சிவனடியார்களுக்குப் பொருளுதவி செய்தல்**

| எண். | பெயர் | செய்த தொண்டுகள் |
|---|---|---|
| 1. | திருநீலகண்ட நாயனார் | சிவனடியார்களுக்குத் திருவோடு கொடுத்தவர். |
| 2. | அமர்நீதி நாயனார் | சிவனடியார்களுக்கு உடுத்துவதற்குக் கோவணம் கொடுத்தல். |
| 3. | நேச நாயனார் | சிவனடியார்களுக்கு உடுத்துவதற்குக் கோவணம் கொடுத்தல். |
| 4. | நரசிங்கமுனையரைய நாயனார் | சிவனடியார்களுக்கு மாதம் ஒருமுறை நூறு பொற்காசுகள் கொடுத்தல். |

பெரியபுராணத்தில் இடம்பெற்றுள்ள *63* நாயன்மார்களுள் சிவனடியார்களுக்குப் பொருளுதவி செய்தவர்களாக மேற்குறிப்பிடப்பட்டுள்ள நான்கு நாயன்மார்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இந்நான்கு நாயன்மார்களுள் இருவர் சிவனடியார்களுக்குக் கோவணம் கொடுப்பதையே தமது முக்கியத் தொண்டாகச் செய்துள்ளனர் (துர்க்காதாஸ், *2003, 230*). மேலும், திருநீலகண்டர், சிவனடியார்களுக்குத் திருவோடு கொடுத்துத் தொண்டாற்றியுள்ளார். இந்த வரிசையில், நரசிங்க முனையரைய நாயனார் மன்னராக இருந்தமையால், சிவனடியார்களுக்கு மாதம் ஒருமுறை நூறு பொற்காசுகள் கொடுத்து சிவத்தொண்டு ஆற்றியுள்ளார் என்பதனைப் பெரியபுராணத்தின் வழி அறியலாம்.

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் உடை மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. சைவ சமயத்தில் உலகப் பற்றைத் துறந்த சிவனடியார்களுக்குக் கோவணம் மட்டுமே உடுத்தும் உடையாகக் கருதப்படுகின்றது. அனைத்தையும் துறந்த நிலையில், சில துறவியர்கள் திகம்பரர்களாக (உடையணியாதவர்கள்) இருந்திருக்கின்றனர். ஆனால் தமிழர் பண்பாட்டுக்கு ஆடையில்லா நிர்வாண நிலையானது பொருத்தமற்றதாகவே எண்ணப்பட்டது. மேலும், மக்களிடையே கலந்து வாழும் நிலைப்பாட்டில் இவ்வடியவர்கள் இருந்ததாலும், கோவணத்தை மட்டும் தங்களின் உடையாகக் கொண்டு வாழ்ந்திருந்தனர் என அறியப்படுகின்றது.

இத்தகைய அடியவர்களுக்கு கோவணமாகிய உடையைக் கொடுப்பது மிகச் சிறந்த புண்ணிய காரியமாகவே போற்றப்பட்டுள்ளது. இறைவழிபாட்டிலும் கூட, இறை மூர்த்தங்களுக்கு ஆடைகளைத் தானம் செய்தல், வேள்வித்தீயில் உடைகளை ஆகுதி செய்தல் போன்றவை உண்டு. இவை இறைவனுக்குச் சேர்ப்பவையாகக் கருதப்படுகின்றது (James, 2002, 742). அதுபோலவே இறைவடிவமாகவே போற்றப்படும் சிவனடியார்களுக்குக் கொடுக்கப்பட்ட ஆடைகளும் சிவபெருமானுக்குக் கொடுக்கப்பட்டதாகவே போற்றப்பட்டது.

இதுவல்லாது, உடையானது மானம் காக்கும் சாதனமாக விளங்கியதால் (இராசேந்திரன், 2011, 52), அடியவர்களுக்கு உடையளித்தலைத் தங்களின் தலையாயப் பணியாகக் கொண்டு வாழ்ந்த நாயன்மார்கள் சிவனடியவர்களின் மானம் காத்த பெருமைக்கும் உரியவர்களாகத் திகழ்ந்துள்ளனர் என்பதுவும் இவ்விடம் காண வேண்டிய குறிப்பாகும்.

இதனைத் தவிர்த்து, சிவனடியார்களுக்குத் திருவோட்டைக் கொடுத்தலும் மிக உயர்ந்த தொண்டாகவே கருதப்படுகிறது. திருநீலகண்டர் திருவோடு செய்து விற்பனை செய்வதைத் தமது தொழிலாகக் கொண்டமையால் அவர் இதனையே சிவனடியார்களுக்குத் தொண்டாகவும் செய்துள்ளார் (கலியாணசுந்தரனார், 2000, 250). சைவ சமயத்தில் திருவோடு மிக உயர்ந்த ஒன்றாகவே கருதப்படுகின்றது. இதனைச் சிவபெருமானும் தமது கையில் ஏந்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. சிவபெருமானின் பிட்சாண்டர் திருக்கோலம் இதனையே காட்டுவதாக அமைகிறது.

சிவபெருமான் கையில் இருப்பது பிரம்ம கபாலம். பிரம்மதேவரின் ஆணவத்திற்குக் காரணமாக இருந்த அவரது ஐந்தாவது தலையைக் கிள்ளி அதனையே திருவோடாக்கிய சிவபெருமானின் இந்தத் தீரச்செயலானது, அவரின் அட்ட வீரட்ட செயல்களுள் ஒன்றாகும். இத்தகைய பிரம்ம கபாலத்தில், இறைவன் உயிர்களின் ஆணவத்தை யாசகமாகப் பெற்று அவ்வுயிர்களை அதன் தளைகளில் இருந்து மீட்கிறார் என சிவமகாபுராணம் கூறுகின்றது (இராமதாஸ், 25).

இத்தகைய பெருமைக்குரிய திருவோடே சிவனடியார்கள் விரும்பி ஏற்கும் பொருளாகின்றது. சிவனடியார்கள் திருவோட்டின் மூலமாகவே தங்களுக்கான உணவினை யாசிக்கின்றார். அடியவர்களுக்குத் திருவோட்டில் இடும் காணிக்கையானது சிவப்பரம்பொருளுக்குப் படைக்கப்படுவதாகவே போற்றப்படுகின்றது. இதனால் அடியவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதோடு மட்டுமல்லாமல், தர்மம் செய்வோருக்கும் புண்ணியப் பலன்கள் சேர்ந்து அவர்களை முக்திக்கு இட்டுச் செல்கிறது.

இத்தகைய திருவோடு சிவபெருமானுக்கு உகந்த திருநீறு வைத்துக் கொள்ளும் கலயமாகவும் விளங்குகின்றது. அடியவர்களுக்கு அருளாசி வழங்கும் அடியார்கள் திருநீற்றையே வழங்குவது வழக்கம். இது அவர்களுக்குத் திருநீற்றுப் பெட்டகமாகவும் உள்ளது. அடியவர்கள் தாக சாந்தி செய்து கொள்வதற்கும் திருவோடு உதவுகிறது. இவ்வாறு அடியவர்களுக்குப் பல நிலைகளிலும் தேவைக்குரிய ஒன்றாகவும், சிவச் சின்னமாகவும்

விளங்கும் திருவோட்டினை அளிக்கும் தொண்டும் இறைவனுக்கு விருப்பமான தொண்டாகவே விளங்கியுள்ளது.

மேலும், நரசிங்க முனையடுவார் நாயனார் சிவனடியார்களுக்கு ஒவ்வொரு மாதமும் 100 பொற்காசுகள் கொடுப்பதைத் தமது திருத்தொண்டாகச் செய்துள்ளார் என்பதனை,

**"முத்து விதான மணிப்பொற் கவரி முறையாலே**
**பக்தர்களோடு பாவையர் சூழப் பலிப்பின்னே**
**வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்**
**அத்தன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்" (திருத்தொண்டர் புராணம்)**

எனும் பாடல் வழி அறிய முடிகின்றது. இது சிவத்தொண்டாக மட்டுமல்லாமல், அரசர் மக்களுக்குச் செய்யும் கடமையாகவும் விளங்கியுள்ளது. மன்னராகிய இவ்வடியவர் மக்களைக் காக்கும் பொறுப்பில் இருப்பவர். சிவனடியார்களுக்கு இவர் செய்த இந்த உயர்ந்த தொண்டானது மக்களிடையே பக்தி நெறி தழைத்தோங்க வகை செய்தது.

சங்க இலக்கியமாகிய கலித்தொகை, மக்களின் நலம் காத்தலும், அவர்களுக்கான வசதிகளைச் செய்து தருதலும் மன்னர்களின் தலையாயக் கடமையாகக் குறிப்பிடுகின்றது. இவ்விலக்கியம் மன்னன் மக்களுக்குச் செய்யும் சேவையைத் தாய் தம் பிள்ளைக்கு ஊட்டும் தாய்ப்பாலுக்கு ஒப்புவமையாகக் குறிப்பிடுகின்றது. தாய்ப்பாலானது ஒரு குழந்தை உயிர் வாழ்வதற்கு ஆதாரமாகின்றது. அதுபோலவே தம் குடிகளின் நலம் காப்பது மன்னன் ஆற்ற வேண்டிய முதன்மைக் கடமையாக இவ்விலக்கியம் சுட்டுகின்றது (கலித்தொகை, 90). இதன் அடிப்படையில் காணும் போது, சிவனைத் தவிர மற்றொன்றின் மீது பற்று கொள்ளாத சிவனடியார்களுக்கு மன்னன் செய்யும் சேவையானது நாடும், மக்களும் சிவனருள் சிறப்புற்று வாழ வகை செய்யும் என்பது திண்ணம்.

சிவனடியவர்களின் தேவைகளை இம்மன்னவன் பூர்த்தி செய்ததன் மூலம், சிவனடியார்களும் மற்ற சிந்தனை ஏதும் இன்றி மக்களிடையே பக்திப் பெருகிட வேண்டி கோவில் கட்டுதல், ஆலய கும்பாபிஷேகம் செய்தல், ஆலய நிர்வகிப்புக்குப் பணம் கொடுத்தல் போன்ற பல சிவ கைங்கரியங்களைச் செய்துள்ளனர். இதனால் மன்னரால் சிவனடியார்களுக்குக் கொடுக்கப்பட்ட பொருளானது மக்களிடையே சிவச் சிந்தனையை மேலோங்கச் செய்து பக்திப் பயிரையும் வளர்த்தது. அவ்விதத்தில் காணும்போது நரசிங்க முனயடுவார் நாயனாரின் சிவத்தொண்டானது சிவச் சிந்தனையை மக்களிடையே மேலோங்கச் செய்ததால் இதுவும் சரியை வழியில் உயர்ந்த தொண்டாகவே போற்றப்பட்டது.

### உடல் உழைப்பால் சிவனடியார்களுக்குத் தொண்டு செய்தல்

ஆய்வின் அடிப்படையில் காணும்போது, அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒரேயொரு அடியவர் மட்டும் தமது உடல் உழைப்பின் வழி சிவனடியார்களுக்குத் திருத்தொண்டாற்றியுள்ளார் என்பது அறியப்படுகின்றது. திருக்குறிப்புத்தொண்ட நாயனார், ஊர் மக்களின் துணிகளை வெளுத்துத் தரும் வண்ணான் தொழிலை மேற்கொண்டவர். அதேவேளையில், சிவனடியார்களின் உடைகளைத் துவைத்துக் கொடுப்பதைத் தமது சிவப்பணியாகவும் மேற்கொண்டு அதனின்று வழுவாமல் தொண்டு செய்து முக்தி பெற்றவர். இவ்வடியவர் செய்த தொண்டானது, பார்வைக்கு மிகச் சாதாரணமான ஒரு தொண்டாகத் தெரிந்தாலும், அது ஓர் உன்னதத் தொண்டாகவே கருதப்படுகின்றது (திருத்தொண்டர் புராணம், திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணம்).

சிவனடியார்கள் முப்போதும் சிவச்சிந்தனையில் நிலைபெற்றவர்கள். இவ்வாறு

எப்பொழுதும் சிவச்சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் அடியவர்கள் தங்களின் புற உடல் குறித்தோ அல்லது புற வாழ்க்கை குறித்தோ பெரிதும் எண்ணுவது கிடையாது. ஆனால், இவர்களுக்கும் உலகத் தேவைகள் சில இருக்கும். அவற்றில் ஒன்றுதான் தமது ஆடைகளைத் துவைத்து அணிதல். இக்காரியத்தில் ஈடுபடுவதால் இவர்களின் இடையறாத சிவச்சிந்தனை சற்றே சிதறலாம். ஆனால் அதற்குக்கூட இடம்கொடாமல் இவர்களின் குறிப்பறிந்து இத்தொண்டினைச் செய்ததால்தான் இந்த நாயனார் திருக்குறிப்புத் தொண்டர் என்றே அழைக்கப்பட்டார்.

இதன்வழி சிவனடியார்களுக்குத் தொண்டு செய்ததோடு மட்டுமல்லாமல், அவர்களின் சிவச்சிந்தனை பாழ்படாமல் இருக்கவும் வகை செய்த சிறப்பு இவரின் தொண்டிற்குப் பின்னால் மறைந்திருக்கும் சிறப்பாகக் காணப்படுகின்றது. ''இறைவனோ தொண்டருள்ளத் தொடுக்கம்'' (சோமசுந்தரம், 1996, 120) என்று பாடுவார் ஔவையார். இதனால் சிவனடியார்களின் மனம் குளிர அவர்களுக்குத் தொண்டு செய்த திருக்குறிப்புத்தொண்டரும், சிவப்பரம்பொருளின் அருளுக்கு ஆட்பட்டதில் வியப்பில்லை. மேலும் உள்ளத் தூய்மையுடனும் உண்மையான அன்புடனும் செய்யப்படும் எந்தச் செயலும் இறைவனால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பது இதன்வழி நமக்குத் தெரியவருகின்றது.

### அடியவர்களுக்கான சோதனையும் சாதனையும்

இந்த அடியவர்களின் வாழ்க்கையைப் பெரியபுராணத்தின் துணைகொண்டு பார்க்கும் போது, இறைவன் நாயன்மார்களுக்குப் பல வகையிலும் சோதனைகளைக் கொடுத்தே, பின்னர் ஆட்கொண்டது அறியப்படுகின்றது. இவர்கள் செய்த திருத்தொண்டுகள் யாவும் போற்றுதலுக்குரிய மேன்மையுடையதாக இருந்தபோதிலும், இவர்கள் கொண்ட கொள்கையில் எவ்வளவு உறுதியுடன் இருந்தனர் என்பது உலகுக்கு உணர்த்தும் பொருட்டே இச்சோதனைகள் யாவும் நிகழ்த்தப்பட்டன. இறைபக்தியில் வைராக்கியம் மிக முக்கியம். பக்தி வைராக்கியம் இல்லாத அடியவர் முக்திக் கனியைச் சுவைத்தல் அரிது.

மேலும் இவர்களுக்கான சோதனைகளும் ஒருவருக்கொருவர் மாறுபட்டதாகவே காணப்படுகின்றது. இது அவரவர் இயல்பிற்கு ஏற்றவாறு இறைவனால் நிகழ்த்தப்பட்டமையாக இருக்கலாம் என்றும் எண்ணத் தோன்றுகிறது. உதாரணமாக, சிறுத்தொண்டருக்கான சோதனையைக் காணும்போது, இறைவன் இவரிடத்தில் பிள்ளைக்கறி யாசிக்கின்றார். இது யாராலும் சற்றும் சகிக்க முடியாத ஒன்றாக விமர்சிக்கப்படலாம்; ஆனால், இவ்வடியவரின் வாழ்க்கையைச் சற்றே பின்னோக்கிச் சென்று பார்த்தால், இதற்கான விளக்கம் கிட்டும். சிறுத்தொண்டராக மாறுவதற்கு முன்னர் இவர் ஒரு படைத்தளபதி. போர்க்களங்கள் பல கண்டவர். குருதியும், போரில் வீரர்களை எமனுலகிற்கு அனுப்புதலும் இவருக்குப் புதிதல்ல.

இவர் படைத்தளபதியாக இருந்த காலத்திலும், மன்னவன் பணியை, அவனது ஆணையை இறைப்பணியாக ஏற்றே செயல்பட்டார். இதில் அவருக்கென விருப்பு, வெறுப்பு இருந்ததில்லை. ஏனெனில், பண்டைத் தமிழர் வாழ்வியலில் நீதி தவறாத ஆட்சியை வழங்கும் மன்னவன் இறைவனுக்குச் சமமாகவே போற்றப்பட்டான். இதனையே வள்ளுவம்,

> **"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
> **இறையென்று வைக்கப் படும்" (திருக்குறள், 388)**

என்கிறது. ஆகவே இந்த நோக்கில் காணும்போது, சிறுத்தொண்டரும் அத்தகைய நிலைப்பாட்டிலேயே தம் கடமைகளைப் பற்றில்லாமல், மன்னவன் பொருட்டு செய்திருக்கின்றார் என அறியப்படுகின்றது. இதனால் போரில் நிகழ்ந்த உயிர்க்கொலையும், குருதியோட்டமும் இவரிடம் சலனத்தைத் தோற்றுவிக்கவில்லை.

ஆனால் அதே நிலை தம் மகனுக்குத் தன் கையாலேயே வரும் நிலையில், இவரின் பக்தி வைராக்கியம் எப்படி இருக்கும் என்பதைப் பரிசோதிப்பதற்காகவே இத்தகைய திருவிளையாடலை இறைவன் நிகழ்த்தினாரோ என்று கூட எண்ணுவது பிழையாகாது. அதேவேளையில், போரிலே எத்தனையோ உயிர்களை வதைத்த செயல்பாட்டின் துயர அனுபவத்தைத் தம் பிள்ளையை அரிந்து கறி சமைத்ததன் மூலம் இவருக்கு இறைவன் கொடுத்திருக்கலாம் என்று எண்ணுவதிலும் குற்றமில்லை.

இவரைப் போலவே, ஒவ்வொரு அடியவருக்கும் இறைவன் அளித்த சோதனைகளுக்கும் பல உட்பொருளார்ந்த காரணங்கள் இருக்கலாம். ஆனால் இவை அனைத்திலும் மிக முக்கியமானதாகச் சிந்திக்கப்பட வேண்டியது, இவர்களிடம் இருந்த திட சித்தமும், பக்தி வைராக்கியமுமே ஆகும். இவர்கள் செய்த சிவத்தொண்டுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் சிவநெறியைத் தழைத்தோங்கச் செய்த போதிலும் இவற்றிற்கும் மேலாக இவர்கள் கொண்ட பக்தி வைராக்கியமே இவர்களை முக்திக்கு இட்டுச் சென்றது எனலாம்.

## முடிவுரை

பெரியபுராணத்தின் வழி பல நாயன்மார்கள் சரியையைப் பின்பற்றியே முக்தி அடைந்துள்ளனர் என்பதனை மேற்குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களின் வழி அறிய முடிகின்றது. உண்மையான அன்போடு இறைத்தொண்டு செய்பவர்கள் இறையருளைக் கண்டிப்பாகப் பெறுவர் என்பதனை நாம் பெரியபுராணத்தின் வழி அறியலாம். இவர்கள் காட்டிய நெறியில் சில தற்காலத்திற்குப் பொருந்துவதாக இல்லாமல் இருப்பினும், இவர்கள் கொண்ட பக்தி வைராக்கியம் எக்காலத்தும் பொருந்துவதாகவே உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. அதோடு, மனதுக்கண் மாசிலன் ஆதல் என்பதுவே இறைவனை அடைவதற்கான சிறந்த வழியாக இவ்வடியவர்களின் வாழ்க்கையைத் துணைகொண்டு அறியலாம். இவ்வடியவர்களைப் போலத் தூய உள்ளம் இருப்பின், அங்கு இறைவன் குடிகொள்வான். முக்தியும் இத்தகையோருக்குத் தொலைவில் இல்லை.

## Bibliography


Durgadass, S., K., Swami. (2003). A_upattu Mûvar Kataika7. Chennai: Prema Publication.

James G, Lochtefeld. 2002. The Illustrated Encyclopedia of Hinduism: N-Z. New York: The Rosen Publishing Group

Janasakthi, S. (2011). "PeriyapurâGam-Camutâya Nôkkil Ôr Pârvai", in V.Narayanasamy, M.Rajantheran, V.sabapathi, G.Sivapalan, GM.Subra, Muthaiya (Eds), PaIIiru Tirumu_ai Âyvu Nûl, (pp.358-364). Chennai: Manivasagar Publication.

Kalittokai.

Kaliyana Suntharanar. (2000). Cçkki;âr PerumâI Aru7iya TiruttoGmar PurâGam. Chennai: Gan gai Book Centre.

Nagappan Arumugam. (2008). Cittânta Caivam. Kuala Lumpur: Siva Enterprise.

Nagappan Arumugam. 2011. Siddhantha Saivam. Kuala Lumpur: Aathi Enterprise.

Nalva;i.

Mûturai.

Rajantheran, M. (2001). "Malçciyat Tami;arimaiyç Pârampariyâ ÂmaiyiI PayaIpâmmup Pôkku: Ôr Âyvu", in Uyar Tami;c Cem'malar, (pp.52-56). Coimbatore: Park Publication.

Rajantheran, M. (2012). Intu Camayam Ôr A_imukam. Petaling Jaya: Malaysia Hindu Sangam.

Ramadass, V., Sirgazhi. Aru7 Tarum Civa VamivaEka7. Petaling Jaya: Thirumurugan Thiruvakku

Thirupedam.
Sami Sithambaranar. (1994). PeriyapurâGac CintaIai. Kumbakonam: Syamala Thiyagarajan Thiruneri Tamil Publication.
Somasundram, C.,s.,S. (1996). Auvaiyç Tami;. Chennai: World Tamil Culture Centre.
Thiruarudpragasa Vallalar. (2013). Tiruvarumpâ Urainamaippakuti. Vadalur: Thiruarudpragasa Vallalar Theivanilayam.
Tirukku_a7.
TiruttoGmar PurâGam.
Tirumantiram.
Vellai Varanan. (2008). PaIIiru Tirumu_ai Varalâ_u. Chennai: Saratha Publication.

•